**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை நிறுவனங்களின் பிரச்சினை குறித்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் உரையாற்றி, அதற்கு மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். எனவே, நானும் அதுகுறித்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.*

*முற்பகல் 10–35*

*நம் நாட்டினுடைய பொதுத் துறை நிறுவனங்கள், நம் அனைவருடைய பொதுச் சொத்தாகும். அவை நமது நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பிற்கும், சிறு, குறு தொழில்களின் ஆணிவேராக விளங்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கக்கூடிய பெருந்தொழில் நிறுவனங்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இலாப நோக்கம் மட்டுமே குறிக்கோளாக இல்லாமல், மக்கள் நலன் கருதி இயங்கி வரக்கூடிய பொதுத் துறை நிறுவனங்களை விற்பதோ, குத்தகைக்கு விடுவதோ தேச நலனுக்கு உகந்தது அல்ல என்பது நம்முடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி)*

*எனவே, ஒன்றிய அரசினுடைய பொதுச் சொத்துக்களைத் தனியார்மயமாக்கும் போக்கினை எதிர்க்கக்கூடிய வகையிலே, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நான் இதைச் சுட்டிக்காட்டி, நம்முடைய எதிர்ப்பைத் தெரிவிக்கக்கூடிய வகையில் கடிதம் எழுதவிருக்கிறேன் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### 1987 ஆம் ஆண்டு நடைபெற்ற இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் உயிரிழந்த சமூகநீதிப் போராளிகளுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைத்தல் குறித்த தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கையளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர்*

*2021 செப்டம்பர் 2]* [பேரவைத் தலைவர்]

*அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110–ன்கீழ் இந்த அறிவிப்பினை நான் வெளியிட விரும்புகிறேன். சமூகநீதிக் கொள்கையின் தாய்மடியாக விளங்கக்கூடிய மாநிலம் நம்முடைய தமிழ் மாநிலம். வகுப்புரிமை, வகுப்புவாரி உரிமை, இட ஒதுக்கீடு, சாதிரீதியான ஒதுக்கீடு என்று எந்தப் பெயரைச் சொல்லி அழைத்தாலும், அதற்கு சமூகநீதி என்ற ஒற்றைச் சொல் கொடுக்கும் பொருளை வேறு எந்தச் சொல்லும் தருவது கிடையாது. அத்தகைய சமூகநீதிக் கொள்கைதான் திராவிட இயக்கம், இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்குக் கொடுத்த மாபெரும் கொடையாகும். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இந்திய ஒன்றியத்துக்கே அந்தத் தத்துவத்தை திராவிட இயக்கம் கொடையாக வழங்கியது.*

*வகுப்புரிமை* (Communal G.O.) *எனும் இட ஒதுக்கீட்டு முறையை நூறாண்டுகளுக்குமுன் நடைமுறைக்குக் கொண்டு வந்தது நீதிக் கட்சிதான். மூடப்பட்டுக் கிடந்த கல்வி, வேலைவாய்ப்பு, அதிகாரப் பதவிகள் அனைத்தும் அதன் மூலமாக அனைவருக்குமானது. சுதந்திர இந்தியாவில் அதற்குச் சட்டரீதியான இடர்பாடு வந்தபோது, தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இருந்து முன்னெடுத்த போராட்டம்தான் அது. அந்தப் போராட்டம் இந்தியத் துணைக் கண்டத்தையே கவனிக்க வைத்தது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், அதனை அன்றைய பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு அவர்களிடத்திலே வலியுறுத்தியதன் காரணமாக, இந்திய அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் செய்யப்பட்டது. தமிழ்நாட்டின் சமூகநீதிக் கொள்கைக்கு இந்திய அரசியல் சட்ட அங்கீகாரம் கிடைத்தது. அப்படி சமூகநீதியை அடைய, பல்வேறு போராட்டங்களை நடத்திய இயக்கம்தான் திராவிட இயக்கம்.*

*பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்குரிய இட ஒதுக்கீட்டினை உறுதிப்படுத்தியதும், காலத்தின் தேவைக்கேற்ப அளவு மாற்றம் பெற்றுத் தந்ததும், கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலான வரலாற்றிலே இருக்கக்கூடிய சரித்திரச் சான்றாகும். அது யாராலும் மறைக்க முடியாத சாசனமாக அமைந்திருக்கிறது.*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2021 செப்டம்பர் 2

சமூகநீதிக்கான தொடர்ச்சியான போராட்டங்களின் வரிசையில், 1987 ஆம் ஆண்டு, 20 விழுக்காடு தனி இட ஒதுக்கீடு கோரி வட தமிழகத்தில் நடைபெற்ற போராட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்தப் போராட்டத்தில், அன்றைய அரசின் காவல் துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்கள் 21 பேர். சமூகநீதிப் போராளிகளான அவர்களுடைய உயிர்த் தியாகத்திற்கும், போராட்டத்திற்கும் நியாயம் வழங்கிடும் வகையில், 1989 ஆம் ஆண்டு அமைந்த முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசு, இந்தியாவிலேயே முதன்முறையாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவை அமைத்துக் கொடுத்து, அவர்களுக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் சம வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அது அவர்களுடைய முன்னேற்றத்திற்கான பாதையை வகுத்துத் தந்தது.

சமூகநீதிக் கொள்கையின் தொடர்ச்சியாக, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது வழியில் செயல்படக்கூடிய நம்முடைய அரசு, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் வன்னிய சமுதாயத்தினருக்கான 10.5 விழுக்காடு தனி ஒதுக்கீட்டினை சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தியிருக்கிறது. ஒடுக்கப்படும் சமுதாயம் எதுவாக இருந்தாலும், அதன் உரிமைகள் காக்கப்பட வேண்டும்; மீட்கப்பட வேண்டும் என்பதே திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய உயர்ந்த நோக்கமாகும். அத்தகைய தியாகிகளின் பங்களிப்பை நினைவுகூர்ந்து, 1987 ஆம் ஆண்டு இட ஒதுக்கீடு போராட்டத்தில் காவல் துறையினுடைய துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூகநீதிப் போராளிகளின் தியாகத்தை மதிக்கக்கூடிய வகையிலே, ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலே, விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விக்கிரவாண்டி இடைத்தேர்தலின்போது நான் அளித்த வாக்குறுதி இது. யார் மறந்திருந்தாலும், நிச்சயம் நான் மறக்கவில்லை; (மேசையைத் தட்டும் ஒலி) யாரையும் மறக்கமாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"நான் சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன். மிகவும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் என் வகுப்புக்கு ஓர் இடம் உண்டு. நான் முதலமைச்சர் பொறுப்பை

ஏற்றுக்கொண்டிருப்பதால், பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக என் உயிரையே பணயமாக வைத்துப் போராடுவேன்" என்று தமிழ்நாடு சட்டமன்றத்திலே அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் சொன்ன வாசகம் இது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உறுதிமொழியினை நானும் ஏற்றுக்கொண்டுள்ளதன் அடையாளம்தான், இந்த அறிவிப்பு என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–40*

## 4. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வழிநின்ற, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், விக்கிரவாண்டி தொகுதி இடைத் தேர்தலில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற வகையில், 10.5 சதவிகித தனி இட ஒதுக்கீட்டிற்கு அரசாணை வெளியிட்டு, கல்வி, வேலைவாய்ப்புகளில் வன்னியர்களுக்கான உரிமையை நிலைநாட்டித் தந்தமைக்காக என் நெஞ்சார்ந்த நன்றியைப் பதிவு செய்கிறேன். ஏற்கெனவே, இதுகுறித்துப் பதிவு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை கோட்டையில் சந்தித்து நன்றி சொல்கின்றபோது, இத்தனை ஆண்டுகால வரலாற்றில், இட ஒதுக்கீட்டுப் போராளிகளாகிய ஏழையெளிய மக்கள், இன்னும் குடிசையில் வாழ்கிறார்கள்; ஆதலால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் 10.00 இலட்ச ரூபாய் செலவில் வீடுகள் கட்டித் தர வேண்டும், அவர்களுக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிய உதவித் தொகை, மாதம் ரூ.3,000/– என்பதை ரூ.10,000/– ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு தளபதி அவர்களிடத்தில் நான் கோரிக்கை வைத்தேன். கடந்தகால ஆட்சியில் பெருந்தலைவர் இராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்பட்டது. அவருடைய திருவுருவப் படம் இந்த மாமன்றத்தில் திறந்துவைக்கப்பட்டது. அதேபோல், தாங்கள் முதலமைச்சராக இருக்கின்ற காலத்தில் இட ஒதுக்கீட்டுப்